# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 19.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 13480/SCIC/2024</u>**

திரு.இரா.சண்முகசுந்தரம், த/பெ.த.இராமசாமி பிள்ளை ...... மேல்முறையீட்டாளர்
எண்.102, இந்திரா நகர்
சவுரிபாளையம் அஞ்சல்
கோயம்புத்தூர்-641 028.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
வடக்கு மண்டலம்
கோயம்புத்தூர் மாநகராட்சி
கோயம்புத்தூர் - 641 001.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **24.07.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.08.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.10.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 07.10.2025 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 17.04.2026 |

1.மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், நகர் மண்டபம், கோயம்புத்தூர்-1 அவர்களுக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான

24/07/2024 தேதியிட்ட மனுவில் "கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டல அலுவலக கடிதம், ந.க.எண்.00253/2023 - டி1இ டி2இ டி3 (வ) நாள் ,022023, இதில் கேள்வி எண்.9 மற்றும் 10 என கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ,மேற்கொண்ட பணிகளின் விவரங்கள் அனைத்தும் மாநகராட்சி இணையதளம் CCMC.GOV.IN மூலம் பதிவிறக்கம் செய்யலாம் என தரவுகளில் உள்ளது. அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் தகவல்களில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 மூலம் வழங்கப்படுகிறது என பொதுத் தகவல் அலுவலரின் கையொப்பம் இடப்பட்டு இருக்கும்படி வழங்கப்படுகிறதா என்ற தகவல் வழங்கவும்." என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய ஆணையத்தின் (19/05/2026) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி செல்வி.செ.சங்கீதா, இளம் பொறியாளர் (பொ), வடக்கு மண்டலம், கோயம்புத்தூர் நகராட்சி, கோயம்புத்தூர் - 37 அவர்கள் ஆஜரானார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம், சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 24/07/2024 தேதியிட்ட மனுவிற்கு அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி/செல்வி.ஸ்ரீதேவி, (தற்போது) உதவி ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்கள் எவ்வித பதிலும் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. மேலும், மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம், சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான 26/08/2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு. சிவக்குமார், (தற்போது) ஆணையாளர், நாமக்கல் நகராட்சி அவர்கள் எவ்வித பதிலும் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன அலுவலர்கள் திருமதி/செல்வி.ஸ்ரீதேவி மற்றும் திரு. சிவக்குமார் ஆகியோர் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்சொன்ன அலுவலர்கள் திருமதி/செல்வி.ஸ்ரீதேவி மற்றும் திரு. சிவக்குமார் ஆகியோரிடமிருந்து காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கங்களைப் பெற்று அதனை ஆணையத்தில் 08/06/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

3. பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், மனுதாரர் பொதுவான தகவல்களையேக் கோரியிருப்பதாகவும், அவர் குறிப்பிட்டு, அன்னார் தொடர்பான தகவல்களைக் கோரினால், அதனை வழங்கிட இயலும் என்றும் தெரிவித்தார். இது குறித்து மனுதாரரிடம் வினவிய போது, மனுதாரர், தனது குடிநீர் குழாய் இணைப்பு, சாலைகளில் உள்ள பள்ளம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட வேண்டும், தான் தொடர்ச்சியாக மனுக்களை அனுப்பியும், மாநகராட்சி எதனையும் செய்து தரவில்லை என்றும், அதன் காரணமாகவே தான், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 வாயிலாக பொதுவான தகவல்களை வழங்க வேண்டுமென்று கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். **மனுதாரரின் கோரிக்கை நியாயமானது என ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. கோயம்புத்தூர் மாநகராட்சி என்பது மிகப் பெரிய மாநகராட்சி, அதில் இது போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தரவில்லையெனில், மாநகராட்சி நிர்வாகத்தினைப் பற்றி நல்லபடியாக கருதவோ, பேசவோ மாட்டார்கள். எனவே, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் மனுதாரர் தெரிவித்துள்ள கோரிக்கைகளின் மீது உரிய கவனம் செலுத்தி, அதனை சீரிய முறையில் சரி செய்து, முறையாக பராமரிக்கப்பட**

**வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13480/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.ஆணையாளர்
கோயம்புத்தூர் மாநகராட்சி
மாநகராட்சி அலுவலகம்
கோயம்புத்தூர்

2.பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையாளர்
வடக்கு மண்டலம்
கோயம்புத்தூர் மாநகராட்சி
கோயம்புத்தூர் - 641 001.

3.திருமதி/செல்வி.ஸ்ரீதேவி,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) உதவி ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி

4.திரு. சிவக்குமார்,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
(தற்போது) ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி

**மேல்முறையீட்டாளர்**

திரு.இரா.சண்முகசுந்தரம், த/பெ.த.இராமசாமி பிள்ளை
எண்.102, இந்திரா நகர்
சவுரிபாளையம் அஞ்சல்
கோயம்புத்தூர்-641 028.

நகல்
பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC